DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**O.S.No: 98/2019**

**(CNR.No: TNTH06-000160-2019)**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சீனிச்சாமி** | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW2** | |

---

நாள் :24.08.2023

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் வாதிக்கு மூத்த சகோதரர் என்றால் சரியல்ல, இளையசகோதரர். வாதி எனது உடன் சகோதரர் என்றால் சரிதான். வாதிக்கும், எனக்கும் எத்தனை வயது வித்தியாசம் என்றால் சுமார் 6 வயது வித்தியாசம். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 10.04.1980ம் தேதி திருமணம் நடந்தது. நான் தற்போது எந்த முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் வார்டு–2, கதவு எண்.140, தெற்கு தெரு, மல்லிங்காபுரம் என்ற ஆனைமலையான்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வசித்துவரும் வீடு எனது சொந்தவீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டை நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 1978ம் வருடம் காலியிடமாக கிரையம் பெற்று 1992ம் வருடம் அதில் வீடு கட்டினேன்.

2) எனக்கு திருமணம் முடிந்து எங்கு குடியிருந்தேன் என்றால் திருமணம் முடிந்தவுடன் சின்னமனூரில் குடியிருந்து வந்தேன். வாதி குடியிருந்து வரும் வீடான வழக்குரை வீட்டில் நான் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் தான் குடியிருந்தேன் என்றால் எனது திருமணத்திற்கு பின்னர் வழக்குரை வீட்டில் நான் குடியிருக்கவில்லை. வழக்குரை வீட்டின் பராமரிப்பு விபரங்கள் பற்றி என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் அவ்வப்போது

வழக்குரை வீட்டிற்கு வந்து செல்வேன். அப்போது எனது அண்ணனான வாதி சொல்லி எனக்கு விபரங்கள் தெரியும். வாதி என் உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவர் சொல்லிக்கொடுத்தபடி பொய்யான விபரங்களுடன் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் உடன் பிறந்த சகோதரர் என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

3) வழக்கு தாக்கல் செய்த விபரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் அடிக்கடி வாதி மற்றும் பிரதிவாதிகளிடேயே சண்டை வரும் அப்போது என்னை அழைத்து சென்று காவல்நிலையத்தில் பேச்சுவார்த்தை செய்வார்கள், அதன் மூலமாக வழக்குரை விபரம் தெரியும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1,2 பிரதிவாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை விட கூடுதலான இடத்தை அனுபவத்து வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளுக்கு எவ்வளவு நிலம் பாத்தியமாக உள்ளது கூடுதலாக எவ்வளவு நிலம் அனுபவித்து வருகிறார்கள் என்று நான் கூறுகிறேன் என்றால் அதுபற்றி குறிப்பாக எனக்கு தெரியாது, சர்வேயர் அளவீடு செய்தபோது பிரதிவாதிகளிடம் கூடுதல் நிலம் இருப்பதாக சொல்லி தெரிந்துகொண்டேன்.

4) நீதிமன்ற ஆணையர் வழக்குரை சொத்தை பார்வையிட்ட போது நானும் உடனிருந்ததாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளது சரிதான். எந்த தேதியில் ஆணையர் எத்தனை மணிக்கு தாவா சொத்தைபார்வையிட்டார் அப்போது யாரெல்லாம் உடனிருந்தால் என்றால் இருதரப்பு வழக்கறிஞர்கள், சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர், நீதிமன்ற ஆணையர் ஆகியோர் இருந்தார்கள், தேதி, நேரம், கிழமை குறிப்பாக ஞாபகமில்லை. உண்மையில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது நான் உடனிருந்தால் தேதி, நேரம் தெரிந்திருக்கும் என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5) வழக்குரை சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது பட்டா எண்,774 ஆகும். வாதி குடியிருக்கும் வீட்டை நீதிமன்ற ஆணையர் அளக்கும் போது எத்தனை அடி தாவா சொத்து இருப்பதாக அளந்து காட்டினார் என்றால் அளவீடு செய்த விபரம் எனக்கு தெரியும், குறிப்பான அளவுகள் பற்றி எனக்கு

தெரியாது. நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் வழக்குரை சொத்தில் நான்கு புறமும் தண்ணீர் கழிப்பதற்காக இடம் விடப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சர்வேயர் அளந்து காட்டிய அடி விபரங்கள் பற்றி தெரியாமல் எதனடிப்படையில் நான்கு பக்கமும் தண்ணீர் கழிக்க இடம் இருப்பதாக கூறுகிறேன் என்றால் எங்கள் பூர்வீக இடம் என்பதால் அந்த விபரம் எனக்கு தெரியும்.

6) பட்டாப்படி கண்ட முழு அளவிலும் வழக்குரைச்சொத்தில் வீடு கட்டப்பட்டுள்ளது என்றும் வழக்குரை சொத்திற்கு வடக்கு பக்கம் தண்ணீர் கழிக்கும் வகையில் காலியிடம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண். 453/39 கிழமேல் பாதை என்றால் சரிதான். மேற்படி பாதை வாதியின் வீட்டிற்கு வடக்கு பக்கமாக உள்ளது என்று கூறுகிறேன் என்றால் சரிதான். வழக்குரை சொத்தின் வடக்கு பக்கம் தண்ணீர் கழிக்கும் இடமும், அதற்கு வடக்கே பாதையும் உள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான். வடக்குபக்க சுவருக்கு, வடக்கே தண்ணீர் கழிக்கும் இடமும், அதற்கு வடக்கே பாதையும் இருப்பதாக வாதி சாட்சியத்தல் எந்த விபரமும் கூறாத நிலையில் வாதியின் சாட்சியத்திற்கு முரணாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது சரியாக அளவீடு செய்தாரா தவறாக அளவீடு செய்யப்பட்டதா என்ற விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது வந்த சர்வேயர் பெயர் என்றால் தெரியாது. மேற்படி சர்வேயர் பெயர் எனக்கு தெரியும் என்றும், அவர் எனக்கு வேண்டப்பட்டவர் என்றும் அதனால் நான் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலம் வாதியின் ஏற்பாட்டில் தயார் செய்யப்பட்டது என்றும் எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை என்றால் சரியல்ல.

<u>3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1,2 பிரதிவாதிகள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பெற்ற உத்தரவின்

அடிப்படையில் அரசு அதிகாரிகள் முறையாக செயல்பட்டுள்ளார்கள் என்றும், நான் வாதியின் சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.